**சார்பு நீதிமன்றம், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.**

முன்னிலை: திரு.எஸ். விஜய் அழகிரி, பி.காம்., பி.எல்.,
சார்பு நீதிபதி, தேன்கனிக்கோட்டை
2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056– விசுவாவசு வருடம் – ஆவணி திங்கள் 31 ம் நாள்)

**இ. ம. எண். 5/2024**
**in**
**அசல் வழக்கு எண். 111/2022**

1. முரளிதரா
2. நரேந்திர பாபு

.... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிராக/

ஸ்ரீநிவாஷ் .... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 08.09.2025ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. A.L. முனிச்சந்திரா, B.Com., LLB., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. T. வேடி, B.A., LLB., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனுகோப்பை பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**உத்தரவு**

மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரையை பெற்றுக் கொள்வதற்காக உ.வி.மு.ச கட்டளை 8 விதி 9 மற்றும் 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

**2. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு உரையின் சுருக்கம் :**

மனுதாரர் இம்மனுவில் 2 வது மனுதாரர் என்றும், அசல் வழக்ககில் 2 வது பிரதிவாதி என்றும், மனுதாரர் இந்த மனுவினை தனக்காகவும் மற்ற மனுதாரருக்காவும் சேர்த்து தாக்கல் செய்திருப்பதாகவும், எதிர்மனுதாரர் அசல் வழக்கினை விளம்புகை மற்றும் இதர பரிகாரங்களுக்காக வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், அசல் வழக்கானது தற்பொழுது விசாரணைக்கு தயாராக உள்ளது என்றும், இந்த மனுதாரர்கள் ஏற்கனவே அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தனர் என்றும், அந்த எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது இந்த எதிர்மனுதாரர்களால் சில முக்கியமான சங்கதிகளை கவனக்குறைவாக விட்டுவிட்டதாகவும், வாதியின் வழக்கினை பொய்யென நிரூபிப்பதற்கு தற்போது இந்த மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் கூடுதல் எதிர்வழக்குரை அவசியம் என்றும், அந்த கூடுதல் எதிர்வழக்குறையை பெற்றுக் கொள்ளாவிட்டால், இந்த மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும், எதிர்வழக்குரையில் சொல்லாத அவசியமான சங்கதிகளை தான் தற்பொழுது இந்த கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லி இருப்பதாகவும், அதனால் இந்த மனுவை அனுமதித்து கூடுதல் எதிர்வழக்குரையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்.**

மனுதாரர்களின் மனுவானது சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர் எதிர்உரையில் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகள் அனைத்தும் மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர் / வாதி, மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தாக்கல் செய்து உள்ளார் என்றும், தற்பொழுது வழக்கானது விசாரணைக்கு உள்ளது உண்மை என்றும், எதிர்வழக்குரையில் சில தேவையான உண்மையான சங்கதிகளை விவரிக்க தவறிவிட்டதாகவும், வாதியின் வழக்கினை தவறு என நிருபிக்க மேற்படி சங்கதிகள் அவசியமாக உள்ளது என்றும், இந்த மனுவினை அனுமதித்து கூடுதல் எதிர்வழக்குறை பெற்றுக் கொள்ளாவிட்டால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத

இழப்பு ஏற்படும் என்றும், எதிர்வழக்குரையில் தெரிவிக்காதது வேண்டுமென்றோ தன் விருப்ப பெயரிலோ ஏற்பட்டது அல்ல என மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் வழக்கினை நிரூபிப்பதற்கு கூடுதல் எதிர்வழக்குரை அவசியமாக உள்ளதாக கூறுவது பொய் என்றும், அதனால் இந்த மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் கூறி எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்று பார்க்கையில்,

7. இருதரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

8. மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர் அசல் வழக்கினை விளம்புகை மற்றும் இதர பரிகாரங்களுக்காக வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், அசல் வழக்கானது தற்பொழுது விசாரணைக்கு தயாராக உள்ளது என்றும், இந்த மனுதாரர்கள் ஏற்கனவே அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தனர் என்றும், அந்த எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது இந்த எதிர்மனுதாரர்களால் சில முக்கியமான சங்கதிகளை கவனக்குறைவாக விட்டுவிட்டதாகவும், வாதியின் வழக்கினை பொய்யென நிரூபிப்பதற்கு தற்போது இந்த மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் கூடுதல் எதிர்வழக்குரை அவசியம் என்றும், அந்த கூடுதல் எதிர்வழக்குறையை பெற்றுக் கொள்ளாவிட்டால், இந்த மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும், எதிர்வழக்குரையில் சொல்லாத அவசியமான சங்கதிகளை தான் தற்பொழுது இந்த கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லி இருப்பதாகவும், அதனால் இந்த மனுவை அனுமதித்து கூடுதல் எதிர்வழக்குரையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

9. இதற்கு எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், எதிர்மனுதாரர் / வாதி, மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தாக்கல் செய்து உள்ளார் என்றும், தற்பொழுது வழக்கானது விசாரணைக்கு உள்ளது உண்மை என்றும், எதிர்வழக்குரையில் சில தேவையான உண்மையான சங்கதிகளை விவரிக்க தவறிவிட்டதாகவும், வாதியின்

வழக்கினை தவறு என நிருபிக்க மேற்படி சங்கதிகள் அவசியமாக உள்ளது என்றும், இந்த மனுவினை அனுமதித்து கூடுதல் எதிர்வழக்குறை பெற்றுக் கொள்ளாவிட்டால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும், எதிர்வழக்குரையில் தெரிவிக்காதது வேண்டுமென்றோ தன் விருப்ப பெயரிலோ ஏற்பட்டது அல்ல என மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் வழக்கினை நிரூபிப்பதற்கு கூடுதல் எதிர்வழக்குரை அவசியமாக உள்ளதாக கூறுவது பொய் என்றும், அதனால் இந்த மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்

10. மனு ஆவணங்களை பரீசிலனை செய்கையில், எதிர்மனுதாரர் / வாதி, மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் பிரதிவாதிகள் கடந்த 02.03.2023 அன்று அவர்களுடைய எதிர் வழக்குரையை தாக்கல் செய்து இருக்கிறார்கள். இ.ம.எண். 4/2024 தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் அசல் வழக்குரையை திருத்தம் செய்வதற்காகவும் மற்றும் திருத்தம் செய்யப்பட்ட அசல் வழக்குரை தாக்கல் செய்வதற்காகவும் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அசல் வழக்கை பரிசீலனை செய்கில், அதில் எதிர்மனுதாரர் / வாதி வா.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருக்கிறது. மனுதாரரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்கையில், தாவா சொத்து சர்வே எண் 307/1 ஏ 2, 307/ 1 பி ஆகியவை ஆரம்பத்தில் 307/1 ஆக இருந்து, அதன் பிறகு உட்பிரிவு செய்யப்பட்டது குறித்தும், மனுதாரர்களின் பாட்டியான கௌரம்மா சர்வே எண் 307/1 ஐ பொருத்து நஞ்சா ரெட்டி மகன் லோகேஷ் பாபு என்பவருக்கு 49 சென்டை பொறுத்து பதிவு செய்யப்பட்ட ஆவணம் எழுதி கொடுத்து இருப்பதை பொருத்தும், பாக்கி விஸ்தீரணம் இருப்பதாகவும் கூறியிருப்பதை எதிர்வழக்குரையில் கூறவில்லை. இந்த மனுதாரர்களுக்கு 68 சென்ட் பொறுத்து ஆவணம் எழுதி கொடுத்திருப்பதாகவும், மீதி உள்ள மீதி பாக்கி

உள்ள 10 சென்ட் பொறுத்து அவர்களுக்குள் வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டது குறித்தும் அது சம்பந்தமாக உட்பிரிவு செய்யப்பட்டது குறித்தும், கூடுதல் எதிர்வழக்குரையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த கூடுதல் எதிர்வழக்குரையில் கூறப்பட்டிருக்கும் விவரங்கள் எதுவும் எதிர்வழக்குரையில் கூறப்படவில்லை. ஆக எதிர்வழக்குறையில் கூறப்படாத சங்கதிகளை தான் மனுதாரர்கள் தற்பொழுது கூடுதல் எதிர்வழக்குரையில் கூறியிருக்கிறார்கள். ஆக, எதிர்வழக்குரையில் கூறாத சங்கதிகளை அதுவும் தாவா சொத்து சம்பந்தமான சங்கதிகளை கூடுதல் எதிர்வழக்குரையில் கூறியிருந்தால் தான் வழக்கு விசாரணையின் போது மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் அவர்களது சங்கதிகளை நிரூபிப்பதற்கு வசதியாக இருக்கும். இந்த மனுவினை அனுமதித்து கூடுதல் எதிர்வழக்குரை பெற்றுக் கொண்டாலும் எதிர்மனுதாரர் / வாதி இந்த கூடுதல் எதிர்வழக்குரைக்கு மறுப்பு தெரிவிப்பதற்கு Reply Statement தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது. எதிர்வழக்குரையில் கூறாத சங்கதிகளை கூடுதல் எதிர்வழக்குரையில் கூறி இருப்பதாலும், கூடுதல் எதிர்வழக்குரையை பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் எதிர்மனுதாரர் / வாதி மறுப்பு தெரிவிப்பதற்கு வாய்ப்பு இருப்பதாலும், வா.சா.1ம் விசாரணை இன்னும் முழுவதுமாக முடிவடையாத நிலையில் இருப்பதாலும், இந்த மனுவினை பெற்றுக் கொள்வதினால் எதிர்மனுதாரர் / வாதிக்கு கஷ்டமோ நஷ்டமோ ஏற்படப்போவதில்லை. ஏன் என்றால், கூடுதல் எதிர்வழக்குறைக்கு மறுப்புரை (Reply Statement) அவர் தாக்கல் செய்ய வாய்ப்புள்ளதால், இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என் இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. தாவா சொத்து குறித்து கூடுதல் வழக்குரையில் சொல்லி இருக்கும் சங்கதிகளை பெற்றுக் கொள்ளாவிட்டால் மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு ஈடு செய்ய முடியாது இழப்பு ஏற்படும் என்பது தெரிய வருகிறது. அதனால் இந்த மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகை இல்லாமல் அனுமதித்து கூடுதல் எதிர்வழக்குரையை பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவமைக்கப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2025–ஆம் ஆண்டு செப்டம்பர் 16–ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Thiru. S. Vijay Alagiri,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரரின் சாட்சி, சான்றாவணபட்டியல் :** இல்லை.

Thiru. S. Vijay Alagiri,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.